# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 38 | 26.04.2023 (புதன்கிழமை) | சித்திரை மாதம் | பக்கங்கள் 5 | ஊக்குவிப்பு : ரூ.30.00





# தந்தை செல்வாவின் 46ம் ஆண்டு நினைவு நாள் யாழில் அனுஸ்டிப்பு!

பக்கம் 05

## யாழில், பாடசாலை மாணவிக்கு வந்த மெசேஜ் பெற்றோர் முற்றுகை பின்கதவால் வெளியேறிய ஆசிரியர்!

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவருக்கு ஆசிரியர் ஒருவரின் பெயரில் தொலைபேசி வழியாக தொந்தரவு செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 05

## மீண்டும் ஒரு யுத்தத்திற்கு ஐ.எம். எப் நிதி வழங்குகின்றதா..! சபையில் கர்ஜித்தார் சிறீதரன்...!



பக்கம் 05

இந்த நாட்டிலே தமிழர் பகுதிகளை கபளீகரம் செய்து, தமிழர்களை இலங்கையிலே இல்லாமல் செய்வதில் இந்த நாடு மிக முக்கியமான பாத்திரத்தை கொண்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியம் இந்த விடயத்திற்கு உடந்தையாக இருக்கப்போகின்றதா என நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (26.04. 2023) உரையாற்றும் போது அவர் இந்த

## கடினமான காலங்களை கடந்து செல்லவேண்டிய தருணத்தில் தமிழர்கள்..!

பக்கம் 05


**அ.நவரத்தினம் அடிகளார்**

கடவுளை வழிபடும் போது எப்போதும் கடினமான காலங்களை கடந்து செல்வதற்கு அருள் புரியுமாறு பிரார்த்தனை செய்யவேண்டுமென கிழக்குப் பல்கலைக்கழக

## இலங்கையில் பல பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படும் ஆபத்து

இலங்கைக்கு அண்மித்த பகுதியில் 900 முதல் 1000 கிலோமீற்றர் வரையிலான புதிய நில எல்லை உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் மற்றும் சுரங்க பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.ஜே.ஏ.அஜித்பிரேம தெரிவித்துள்ளார். இந்த அபாயம் காரணமாக இலங்கையில் நிலநடுக்கம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட



பக்கம் 05

## அஹிம்சை வழியில் கோபத்தை வெளிக்காட்டிய மக்கள்...! இதனை கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக கருதக்கூடாது...!



பக்கம் 05

அஹிம்சை வழியில் மக்கள் கோபத்தை வெளிக்காட்டி உள்ளனர். இதனை கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக கருதக்கூடாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.
அவரால் இன்று (26.04.2023) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடகிழக்கில் நேற்றையதினம் (25.4.2023) முன்னெடுக்கப்பட்ட ஹர்தாலுக்கு அனைத்து தரப்புக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி அஹிம்சை வழியில் தமது கோபத்தை வெளிக்காட்டி உள்ளனர். இக் கோப வெளி காட்டலை தங்கள் தலைமைத்துவ கூட்டுக்கு அல்லது கட்சிகளுக்கு கிடைத்த வெற்றியாக எவரும் கருதக்கூடாது.

அதே போன்று ஆட்சியாளர்கள் தங்களுக்கும் கொழும்பு அரசியலுக்கும் எதிராக தமிழ்

தேசியம் THESIYAM www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com

## உயர்தர விடைத்தாள் திருத்தும் பிரச்சினைக்கு தீர்வு என்ன

கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி தொடர்பான வேலை நிறுத்தம் நிறைவு செய்யப்படுமா? இல்லையா என்பது ஒரு கேள்விக்குறியே. கடந்த வாரம் வேலை நிறுத்தம் முடிவடையவிருந்த போதிலும் விடைத்தாள் மதிப்பீடு அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளதாகவும், மதிப்பீட்டில் பங்குபற்றாதவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பணிப்புறக்கணிப்பை தொடர தீர்மானிக்கப்பட்டது. இந்த இழுபறியால் இரு தரப்பிலும் உயர்தரம் எழுதிய பிள்ளைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மதிப்பீட்டு பணி நடவடிக்கை தாமதமடைவதன் காரணமாக நடைபெற உள்ள மற்ற பரீட்சைகள் எழுதும் பிள்ளைகளை பாதிக்க வாய்ப்புள்ளது. புதிய வரி விதிப்பு காரணமாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஏற்பட்டுள்ள சிரமங்கள் குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாத பின்னணியில். பல்கலைக்கழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டம் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்தும் அரசாங்கம் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கான வேலை நிறுத்தம் இழுத்தடிக்கப்பட்டதால், அதற்கு அரசு எதிர்வினையாற்றியது. ஆனால் என்ன நடந்தது என்றால் பிரச்சனை மேலும் சிக்கலாகியது.

பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் ஆட்சியாளர்கள் எப்போதும் முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்கள். ஆனால் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கல்வியில் அதிகப் பொறுப்பைக் கொண்டிருக்க வேண்டும். எனவே, இந்த விடைத்தாள்களின் மதிப்பீட்டுப் பணி புறக்கணிப்பு தொடராமல் தடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கையில் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் தொழில் வல்லுனர்களுக்கும் சில அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளதாலும், அதிக வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை காரணமாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தலைமையிலான மக்கள் குறிப்பாக பல்கலைக்கழக ஆசிரியர்களின் பணிப்பகிஷ்கரிப்புக்கு இணக்க அணுகுமுறையைக் காட்டினர். ஆனால், உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியைத் தொடர்ந்து புறக்கணிப்பதாக மக்கள் மத்தியில் ஒரு குற்றச்சாட்டு எழுந்தது. விடைத்தாள்களை சரிபார்ப்பதற்காக வழங்கப்படும் தொகையை அதிகரித்துள்ள பின்னணியில் வேலை நிறுத்தத்தை தொடர்வது நியாயமற்றது என தெரிவிக்கப்படுகின்றது. விடைத்தாள்களை திருத்தும் போது பெறப்படும் பணத்தைக் கருத்தில் கொள்ளாமல், தரம் மற்றும் நம்பகத்தன்மையை பேண வேண்டியதன் அவசியத்தை கருத்திற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# யாழ். இளைஞர்கள் இருவர் முல்லைத்தீவில் நீரில் மூழ்கி உயிரிழப்பு!



முல்லைத்தீவு - மல்லாவி, வவுனிக்குளத்தில் நீரில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த குளத்திற்கு நீராடச்சென்ற இரண்டு சகோதரர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இருவரும் யாழ்ப்பாணம் நகரில் இருந்து மரணவீட்டில் கலந்துகொள்ள முல்லைத்தீவு வந்தவர்கள் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள் 27 மற்றும் 16 வயதுகளையுடைய சகோதரர்கள் எனக் கூறப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்லாவி காவல்துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# வெடுக்குநாரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாடுகள் மீள ஆரம்பம்!





வெடுக்குநாரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலத்திற்கு பிறகு பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி உள்ளது.

வவுனியா வடக்கு ஒலுமடு கிராமசேவகர் பிரிவில் இந்த வரலாற்று சிறப்புமிக்க ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உள்ளது.

இந்த ஆலயத்தில் வழிபாடு செய்வதற்கு இடையூறாக தொல்பொருள் திணைக்களம் மற்றும் காவல்துறை என்பன நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில், நீண்ட காலமாக பூஜைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

பின்னர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டிருந்தது.

மீண்டும் கடந்த 24 ஆம் திகதி வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் அதிபர் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆலயம் சார்பாக முன்னிலையாகியிருந்தார்.

இந்தநிலையில், அடியார்கள் வழிபாட்டுக்கு செல்வது மற்றும் ஆலய வழிபாடுகளை நடத்துவது என்பவற்றிற்கு அரச உத்தியோகஸ்தர்கள் எவரும் தடை விதிக்க முடியாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# தந்தை செல்வா சதுக்கத்தில் தொடர் திருட்டு முறைப்பாட்டை கண்டுகொள்ளாத காவல்துறை!





யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த திருட்டுத் தொடர்பில் தொடர்ச்சியாக காவல்துறையினருக்கு முறைப்பாடு வழங்கியும் அவர்கள் இது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென பராமரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாண காவல் நிலைய முன்றலிலேயே அமைந்துள்ளது. இருப்பினும் அங்கு தொடர்ச்சியாக திருட்டு சம்பவம் இடம்பெறுவதாகவும் கவலை வெளியிட ப்பட்டுள்ளது.

அதற்கமைய தந்தை செல்வா சதுக்கத்தில் நீண்ட காலமாக மின் இயந்திரம் திருடப்பட்டதாகவும், மூன்று தடவைகளாக ரூபாய் 75 ஆயிரம் பெறுமதியான மின் இயந்திரம் திருடப்பட்டுள்ளது எனவும் தந்தை செல்வா சதுக்க பராமரிப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் தான் தந்தை செல்வா சதுக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த 80 அடி நீளமான இடி தாங்கி மற்றும் அதற்குரிய செப்பிலான இணைப்பு ஆகியன திருடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும் இது வரை காவல்துறையினர் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் தந்தை செல்வா சதுக்கத்தின் நலன்விரும்பிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# ஆலையடிவேம்பு கண்டக்குழி குளத்தை மண்கொட்டி நிரவி குளத்தை அபகரிக்க முயற்சி

## தடுத்து நிறுத்திய பிரதேச செயலாளர்




அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கண்டக்குழி குளத்தை மண் நிரவி குளத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட வரை பிரதேச செயலாளர் வி.பாபகரன் தடுத்து நிறுத்திய சம்பவம் இன்று புதன்கிழமை (26) இடம்பெற்றுள்ளது

குறித்த பிரதேச செயலகத்தின் கீழ் பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான வீதியிலுள்ள இந்து மயானத்துக்கு எதிராகவுள்ள கண்டக்குழி குளத்திலிருந்து அந்த பகுதி விவசபயிகள் வயல் நிலங்களுக்கு நீரை பெற்றுவருவதுடன் கால்நடைகளும் அந்த குளத்து நீரை பயன்படுத்தி வருகின்றது

இந்த நிலையில் கடந்த கால யுத்த சூழல் காலத்தில் அந்த பகுதியில் விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருந்த நிலையில் தமிழ் மக்கள் அங்கு செல்லமுடியாத சூழலை பயன்படுத்து ஒரு தரப்பினர் குளத்தின் ஒரு பகுதியை அபகரித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து கடந்த 2010 ம் ஆண்டு அந்த குளத்தை 10 இலச்சம் ரூபா செலவில் பிரதேச செயலகத்தினால் புனரமைக்கப்பட்ட அந்த குளத்தின் அருகில் சிலர் அடிக்கடி சென்று தமது நிலம் என சொந்தம் கொண்டாடி குளத்தை அபகரிக்க முற்பட்டு தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்று வந்தன.

இவ்வாறான நிலையில் அக்கரைப்பற்று எல்லை பகுதியிலுள்ள ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அரச காணிகள் குளங்கள் வெள்ளநீர் ஓடும் வாய்க்கால்களை சிலர் திட்டமிட்டு சட்ட விரோதமாக அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனா்.

இதன் ஒரு அங்கமாக இந்த கண்டகுழி குளத்தின் ஒரு பகுதியில் திடீரென அந்த பகுதியை சேராத ஒருவர் கனரக வாகனத்தில் மண்ணை கொண்டுவந்து கொட்டி குளத்தை நிரப்பும் செயற்பாட்டில் ஈடுபடுவதை பொதுமக்கள் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து உடனடியாக பிரதேச செயலாள் சென்று குள அபகிப்பதை தடுத்து நிறுத்தியுள்ளனார்.

அதேவேளை குளத்தின் அருகிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் இருந்து கழிவான உமிகளை குளத்தினுள் கொட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கனகராசா சரவணன் ■ அம்பாறை

# இரகசியத் தகவலையடுத்து யாழ் நகரில் திடீர் சோதனை வசமாக சிக்கிய நபர்!



யாழ் நகரப் பகுதியில் அமைந்துள்ள கடைகளில் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ் நகர் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனிற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்தே இன்றைய தினம் இந்த திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த திடீர் நடவடிக்கை தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

யாழ் நகரப் பகுதியில் உள்ள சில கடைகளிற்கு காலாவதியான சோடா போத்தல்களில், காலாவதி திகதியில் மாற்றம் செய்து, சோடாப் போத்தல்கள், ஓர் விநியோகஸ்தரினால் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, யாழ் நகர் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனிற்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

அதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொது சுகாதார பரிசோதகர்கள் யாழ்.நகர கடைகளில் எழுமாறாக பரிசோதனை மேற்கொண்டனர்.

இதன் போது காலாவதியான சோடாப் போத்தல்களில், காலாவதி திகதியில் மாற்றம் செய்தும், காலாவதி திகதியை அழித்தும் சோடாப் போத்தல்கள் கடைகளிற்கு விநியோகம் செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

இதனைதொடர்ந்து பிறவுன் வீதியில் உள்ள விநியோகஸ்தரின் களஞ்சியசாலை யாழ் மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது காலாவதி திகதி அழிக்கப்பட்ட நிலையில் 1110 சோடாப் போத்தல்களும், காலாவதியான திகதியுடன் 600 சோடாப் போத்தல்களும் என மொத்தம் 1710 சோடாப் போத்தல்கள், கடைகளிற்கு விநியோகம் செய்வதற்கு தயார் நிலையில் இருந்த போது பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து, குறித்த விநியோகஸ்தரிற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பொது சுகாதார பரிசோதகர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# விருந்திற்கு சென்ற மாணவிக்கு நேர்ந்த பெரும் துயர் : பரிதாபமாக மரணம்




மாத்தறையிலிருந்து காலி நோக்கி ஓடும் தொடருந்தில் மோதி பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாத்தறை, நுபே தொடருந்து கேட்டிற்கும் பாம்புரான புகையிரத நிலையத்திற்கும் இடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் ஹித்தெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய பெந்தோட்ட கேவத்த என்ற பாடசாலை மாணவியே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மேலும் மூன்று நண்பர்களுடன் விருந்துக்கு சென்றுவிட்டு தொடருந்து தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டுள்ளது. சடலம் மாத்தறை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூர் செய்திகள் ■ மாத்தறை

# சர்ச்சைக்குரிய கச்சைதீவு புத்தர் சிலையை அகற்றிவிட்டதாக யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அறிவிப்பு..!




கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்டுவிட்டதாக எமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது. ஆயர் இல்லம் சார்பில் யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கபட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு கொண்டுசெல்லப்பட்டுவிட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறும் கேட்டு யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கடந்த மார்ச் 27ல் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## மட்டக்களப்பின் இரு மாணவர்களுக்கு அதி உயர் ஜனாதிபதி விருது!



மட்டக்களப்பின் புனித மிக்கேல் கல்லூரி மாணவர்களும் சிரேஷ்ட சாரணர்களுமான தவேந்திரன் மதுஷிகன் மற்றும் அமலநாதன் கௌஷிகன் ஆகியோரிற்கு சாரணியத்திற்கான அதி உயர் விருதான ஜனாதிபதி விருது கிடைத்துள்ளது.

மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று (26) மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் பாடசாலை முதல்வர் பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் இச்சின்னங்களை மாவட்ட சாரண ஆணையாளர் வி. பிரதீபன் மற்றும் பாடசாலை சாரண ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்கும் போது இலங்கை சாரணியப் படையில் இணைந்து தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

இதன்போது, ஜனாதிபதி விருதுக்கான சின்னம் சூட்டப்பட்ட தவேந்திரன் மதுஷிகன் எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவுள்ளார். இந்நிலையில் மாணவரின் வீர தீர செயற்பாட்டிற்காக பாடசாலை, சாரணிய மற்றும் பாடசாலை சாரணியக் கொடிகள் என்பன மதுஷிகனுக்கு கையளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

## கிழக்கு மாகாண ஆளுநராக தமிழர்! வடக்கு உட்பட பல மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள்



ஆளுநர் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தேசித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி, எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி புதிய ஆளுநர்கள் சிலரை நியமிக்கவுள்ளார் என கூறப்படுகின்றது.

இதன்போது, கிழக்கு மாகாண ஆளுநராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன், மத்திய மாகாண ஆளுநர் பதவி முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்கவுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதன் பின்னர் ஏனைய மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

எனினும், தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தற்போதைய ஆளுநர் பதவி வகிப்பவர்கள் அப்பதவியில் நீடிப்பார்கள் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ கிழக்கு மாகாணம்

## பொலிஸ் உத்தியோகத்தரான யாழ். சாவகச்சேரி கஜீவன் விபத்தில் இறந்தது எப்படி?





கொடிகாமம் எருவன் பகுதியில் நேற்று இரவு நிகழ்ந்த விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்திருந்தார். அவருடன் பயணித்த மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் சிறிய காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பருத்தித்துறை - கொடிகாமம் வீதி எருவன் பகுதியில் நேற்று இரவு (25) குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை சேர்ந்த 25 வயதான கோ.கஜீபன் ஆவார். இவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

இவர் முன்னர் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று வழக்கொன்றில் சாட்சியமளிக்க வந்த பின்னர், நெல்லியடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நண்பரான மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தருடன் வீட்டுக்கு சென்றுகொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்தது.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரே மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றார். அப்போது எதிரே வந்த வாகனம் அதிக வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டு வந்துள்ளது. எதிரே வாகனம் வந்த போதும் டிம் லைட்டை ஒளிர விடவில்லை.

தலைக்கவசம் அணிந்து, கண்ணாடியை மூடியிருந்த பொலிஸ் உத்தியோகத்தர், அதிக வெளிச்சத்தால் வீதியை சரியாக கணிக்க முடியாமல் போயுள்ளது. அந்த இடத்தில் வீதி வளைந்த போதும், அவர் நேராக மோட்டார் சைக்கிளை செலுத்தியுள்ளார்.

பின்னாலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர், அந்த இடம் வீதி வளைவு என பின்னாலிருந்து சத்தமிட்ட போதும், கண்ணிமைக்கும் நேரத்தில் விபத்து நிகழ்ந்து விட்டது.

எதிரேயிருந்த காணிக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்துள்ளது. முட்கம்பி வேலியை அறுத்துக் கொண்டு காணிக்குள் மோட்டார் சைக்கிள் பாய்ந்ததில், அதை செலுத்தியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் உடலில் காயங்கள் தென்படவில்லை. எனினும், மூக்கிலிருந்து இரத்தம் வெளியேறியிருந்தது. கழுத்தின் உட்பகுதி பாதிக்கப்பட்டு அவர் உயிரிழந்திருக்கலாமென கருதப்படுகிறது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## யாழ் நெடுந்தீவு கொலைச் சம்பவம் ஐந்தறிவு ஜீவன் தொடர்பில் வெளியான தகவல்!



நெடுந்தீவு கொலைச் சம்பவத்தில் காயமடைந்த ஐந்தறிவு ஜீவனும் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு பகுதியிலுள்ள வீடொன்றில் கூரிய ஆயுதங்களினால் தாக்கி ஐவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. சம்பவத்தில் 3 பெண்களும் இரு ஆண்களுமே கொலை செய்யப்பட்ட நிலையில் 100 வயது மூதாட்டி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா மருத்துவமனையில் சிகிற்சையில் உள்ளார்.

ஈவிரக்கமற்ற நபரின் இந்த கொடூர கொலை சம்பவத்தில் வீட்டினரின் நாயும் காயமடைந்திருந்தது. இந்த நிலையில் குறித்த நாய் தற்போது உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும், இந்த கொடூர சம்பவம் தொடர்பில் 51 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் :

### சட்ட நிபுணர் குழுவின் சில சரத்துக்கள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுகிறது

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள சட்ட நிபுணர் குழுவின் சில சரத்துக்கள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

மார்ச் 22ஆம் திகதி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சட்ட நிபுணர்கள் அடங்கிய விசேட குழுவொன்றை இந்த சட்டத்தை ஆராய்வதற்காக நியமித்தது.

அதன்படி, சட்டமூலத்தின் 3, 4, 10, 11, 13, 14, 15, 16, 28, 30, 31, 36, 82, 83, 84, 85, மற்றும் 86 ஆகிய சரத்துக்களில் குற்றவியல் சட்டத்தின் கொள்கைகளை மீறுவதாகத் தெரியவந்துள்ளது.

அத்துடன், பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடல், சங்கம், தொழில் ஒன்றில் ஈடுபடுதல் மற்றும் நடமாடும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் அக்கட்டுரைகள் மூலம் மீறப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் தெரிவிக்கிறது.

சம்பந்தப்பட்ட குழுவால் அவதானிக்கப்பட்டுள்ள குறித்த விடயங்கள் தொடர்பில் நீதி அமைச்சு மற்றும் ஏனைய அனைத்து தரப்பினருக்கும் விளக்கமளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சட்டமூலத்திற்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் உரிய சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

உள்ளூர் செய்திகள் ■ கொழும்பு

## தந்தை செல்வாவின் 46ம்...

தந்தை செல்வாவின் 46 ம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலியும் நினைவுப் பேருரையும் இன்று (26) காலை 10 மணியளவில் தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுதன தலைவர் ஓய்வு நிலை ஆயர் சு.ஜெபநேசன் தலைமையில் தந்தை செல்வா நினைவிடத்தில் இடம்பெற்றது.

இதன் போது தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா தந்தை செல்வாவின் தூபிக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலியும் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஏனையவர்களும் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தினர்.

"தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வா சாதித்தவை" எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ.நவரத்தினம் அடிகளார் நினைவுப் பேருரையை ஆற்றியிருந்தார்.

## மீண்டும் ஒரு யுத்தத்திற்கு...

விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமலாக்கப்பட்டவர்கள் இதுவரை வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களா கவே இருக்கும் நிலையிலும், எங்களது நிலங்கள் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள நிலையிலும், தமிழ் தேசிய இனம் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சூழலிலும், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி வழங்கியுள்ளது என்பதைதான் நாம் பார்க்கின்றோம்.

இதற்கமைய சர்வதேச நாணய நிதிய நிபந்தனை மூலம் இந்த நாட்டில் இரு க்கும் இன ப்பிரச்சினை அல்லது அரசி யல் பிரச்சினை தொடர்பில் அவர்களால் என்ன செய்ய முடிந்தது? மீண்டும் ஒரு யுத்தத்திற்கு ஐ.எம். எப் நிதி வழங்குகின்றதா?

இந்த நாட்டிலே ஒரு இனம் அழிக்கப்பட்டு வருகின்றது, அந்த இனத்தின் வாழ்க்கை தொலைக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழலில் சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற கடன் ஊடாக இலங்கை தன்னை கட்டியெழுப்பிக்கொண்டு மீண்டும் ஒரு இனத்தை அழிக்க முற்படும் என்பதை குறிப்பிடுகின்றோம்.

இவ்வாறு நடக்காது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. இலங்கையினுடைய பொருளாதரத்தில் ஒரு பெரிய யுத்தத்தை கடன் வாங்கித்தான் நடத்தியது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கையின் பல பகுதிக...

புவியியல் மற்றும் சுரங்க பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.ஜே.ஏ.அஜித் பிரேம இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரை நாட்டில் 09 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் குறிப்பிட்டுள்ளது.

4 மாதங்களில் குறுகிய காலத்தில் நாட்டில் 09 நிலநடுக்கங்கள் பதிவாகியிருப்பது இதுவே முதல் முறை என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

நிலநடுக்கங்களில் பெரும்பாலானவை நாட்டின் உள்பகுதியிலும், மீதமுள்ள நிலநடுக்கங்கள் நாட்டின் கரையோரத்திலும் ஏற்பட்டுள்ளன.

## யாழில் பாடசாலை மாணவி...

இந்நிலையில் நேற்றைய தினம் மாணவியின் பெற்றோருடன் சிலர் பாடசாலை வாயிலில் கூடியிருந்தனர். இதனால் குறிப்பிட்ட ஆசிரியர் அச்சம் காரணமாக பாடசாலை பின் கதவால் வெளியேறியிருக்கின்றார்.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்தை ஆய்வு செய்தனர். இதன் போது, அது அந்த ஆசிரியருடையது அல்ல என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கடினமான காலங்களை...

முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.நவரத்தினம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 46 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றில் தந்தை செல்வா சாதித்தவை" எனும் தலைப்பில் அஞ்சலி நினைவுப் பேருரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களும் தற்போது கடினமாக காலகட்டத்தில் நிற்பதாகவும் இதனை கடந்து செல்வதற்கே முயற்சிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் முன்னால் தற்போது நிறைய சவால்கள் காத்திருப்பதாகவும் குறிப்பாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், தமிழர்களின் மரபுரிகள், வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்படுவது போன்ற பல விடயங்கள் தமிழர் பகுதிகளில் இடம்பெறுவதாக கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தெரிவித்திருந்தார்.

அடுத்து அரசியல் சிவில் சமூகங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் தற்போது அதிகரித்து வருகின்றது. இவ்வாறு பல சாவால்கள் தமிழர்களுக்கு முன்னால் தற்போது எழுந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## அஹிம்சை வழியில் கோபத்...

மக்களின் மனநிலையை புரிந்து கொண்டால் மட்டுமே நாட்டில் அரசியல் நிலைதன்மை ஏற்படும் என்பதையும் உணர்தல் வேண்டும். இதனை இனவாத, மதவாத கண்ணோட்டத்தில் புலிகளின் எழுச்சி என முத்திரை குத்த வேண்டாம் எனவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஹர்தாலுக்கு முதல் நாள் அது தொடர்பில் தமது அதிருப்தினையும், எதிர்ப்பினையும் ஊடகங்களில் வெளிப்படுத்தியிருந்தனர். ரணில் விக்ரமசிங்க "பௌத்த ஆக்கிரமிப்பு நடக்கவில்லை" என முழு பூசணிக்காய் ஒரு பிடி சோற்றுக்குள் மறைக்க முற்படுவது போன்று கூறியுள்ளார். இது தமிழர்களை அழிப்பதற்கு இவர்கள் தொடர்ந்தும் செயற்படுவார்கள் என்பதையே வெளிக்காட்டுகின்றது.

அத்தோடு நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கொட்டியா (புலி) என அடையாளப்படுத்தி உள்ளனர். இது நீண்ட காலமாகவே தொடரும் ஒரு விடயமாகும். அரசியல் கைதிகளை மண்டியிட செய்தி நெற்றியில் துப்பாக்கி வைத்து கொட்டி (புலி) யென கொலை அச்சுறுத்தியவர்கள், ஒட்டுமொத்த தமிழர்களையும் பயங்கரவாதியாக்கி சிறைக்குள் தள்ளியவர்கள் திறந்தவெளி சிறைக்குள் வைத்தவர்கள் அதே நிலையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையே மீண்டும் நாடாளுமன்ற நிகழ்வு காட்டுகின்றது. அவர்களின் மன நிலையில் மாற்றம் ஏற்படும் வரை நாட்டிற்கு அரசியல் எதிர்காலம் இல்லை. அதே போன்று தமிழர்களுக்கும் எதிர்காலம் இல்லை என்று கூறலாம்.

இந்நிலையில் மக்களின் எதிர்ப்பினை தேசிய அரசியலுக்கான சக்தியாக விழிப்புணர்வு செய்து அதனை பெரும் சக்தியாக பரிணமிக்க வழி செய்ய வேண்டும். இதனை செய்யக்கூடிய தகுதி ஒற்றை ஆட்சியையும் 13 ஆவது திருத்தத்தையும் ஏற்றுக் கொள்கின்றவர்களால் செய்ய முடியாது. இவ்விரண்டையும் 35 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் ஏற்று கொள்ளவில்லை. இதனை ஏற்றுக் கொள்ளுமாறு தமிழர்களை அச்சுறுத்துவதற்கோ, அடிபணிய வைப்பதற்கோ, உலகில் ஜனநாயக நாடக் கூறப்படும் இந்தியாவிற்கு உரிமையும் இல்லை என்பதையும் பகிரங்கமாக இவ்வேளையில் வெளிப்படுத்த வேண்டும்.

அதேபோன்று தமிழர்களை அழிப்பதற்கு துணை நின்றவர்களாலும், ஒற்றை ஆட்சியையும் 13 திருத்தத்தையும் பாதுகாக்கவும் அதற்கு கொடி பிடிக்கவும் துணை நிற்பவர்களால் தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கவும் முடியாது.

நடந்த எதிர்ப்பு ஹர்தாலை முழு வெற்றியாக்க தமிழ் அரசியல் தலைமைகளும், சிவில் சமூகமும் ஒன்று இணைந்து கூட்டு செயல்பாட்டிலே ஈடுபடல் வேண்டும். இவ்வாறான பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதும் நாம் தவறவிட்டுள்ளோம் என்பதே உண்மை. இதனைக் கருத்தில் கொண்டு திறந்த மனதோடு அரசியல் கட்சிகள் மக்கள் முன் நிற்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு. அதுவே தமிழர்களின் அடையாளத்தையும், தேசியத்தையும் பாதுகாக்கும் செயற்பாடாக அமையும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் ஆசிரியர் நியமனம்

## குறித்த வேண்டுகோள்: வியாழேந்திரன்



தற்போது வழங்கப்பட இருக்கும் கல்வியியல் கல்லூரி ஆசிரிய நியமனங்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர்களை அதே மாவட்டத்திற்கு ஆசிரியர்களாக நியமிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விடயம் சம்பந்தப்பட்ட விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டதோடு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளேன்.

B.E.D பட்டதாரிகளுக்கு ஏனைய மாகாணங்களில் நியமனம் வழங்கப்பட்ட நிலையில் கிழக்கு மாகாணத்தில் B.E.D பட்டப்படிப்பை முடித்து இதுவரை நியமனம் வழங்கப்படாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கான நியமனங்களை தாமதிக்காது வழங்க வழி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

